# பிற்சேர்க்கை - 4

## பங்கு தரகர்கள், துணை தரகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் உரிமைகளும் பொறுப்புகளும்

## *SEBI மற்றும் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் வரையறையிட்டபடி*

1. எக்ஸ்சேஞ்சுகள் / இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தணை வாரியம் (SEBI) வகுத்திருக்கும் விதிகள், துணை விதிகள் மற்றும் விதிமுறைகளில் மற்றும் இவற்றை அனுசரித்து அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் / அறிக்கைகளில் காணப்படும் பங்கு ஆவணங்கள் / ஒப்பந்தங்கள் / இதர சாதனங்களில் வாடிக்கையாளர் முதலீடு செய்வார் / வர்த்தகங்களை மேற்கொள்ள வேண்டும்.

2. எக்ஸ்சேஞ்சுகள் வகுத்திருக்கும் விதிகள், துணை விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கும், அவற்றின் கீழ் அவ்வப்போது வெளியிடப்பட்டும் சுற்றறிக்கைகள்/ அறிக்கைகள் மற்றும் SEBIயின் விதிகள் மற்றும் விதிமுறைகள் மற்றும் அரசு அதிகாரிகளால் அவ்வப்போது வழங்கப்பட்டு நடைமுறையிலிருக்கும் அறிவிப்புகள் ஆகியவவை அனைத்திற்கும் பங்கு தரகர், துணை தரகர் மற்றும் வாடிக்கையாளர் கட்டுப்பட்டிருப்பார்கள்.

3. பங்குகள் மற்றும்/ அல்லது டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களில் வர்த்தகம் செய்ய பங்கு தரகர் நிலையில் இருந்து வாடிக்கையாளர் தன்னை திருப்தி செய்ய வேண்டும், பங்கு தரகர் மூலமாக தன் கட்டளைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் வாடிக்கையாளர் விரும்ப வேண்டும், கூடவே பங்கு தரகர் மூலமாக வர்த்தகத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு முன்னால் ஒவ்வொரு முறையும் அப்படிப்பட்ட பங்கு தரகர் நிலையில் இருந்து தன்னையே திருப்தி செய்துகொள்ள வேண்டும்.

4. வாடிக்கையாளரின் நிதிநிலைத் தகுதி மற்றும் தான் வழங்கும் சேவைகளுக்கான முதலீட்டு நோக்கங்கள் ஆகியவகை குறித்து பங்கு தரகர் தொடர்ந்து தன்னையே திருப்தி செய்து வர்த்தகங்களை மேற்கொள்ள வேண்டும்.

5. தன்னுடைய தகுதிநிலை மற்றும் வரம்புகளுக்கு உட்பட்ட துல்லியமான பொறுப்புகளை அனுசரித்து பங்கு தரகராக தான் பங்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதை வாடிக்கையாளருக்கு அவர் புரிய வைக்க வேண்டும்.

6. துணை தரகரைப் பொறுத்த வரையில், பங்கு தரகருக்குத் தேவைப்படும் உதவிகளை அளித்து வாடிக்கையாளருடன்(வாடிக்கையாளருடன்) அவர் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளிலும் துணை தரகர் ஒத்துழைக்க வேண்டும்.

## வாடிக்கையாளர் விபரங்கள்

7. ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள்/SEBI அவ்வப்போது கட்டாயமாக்கப்பட்டு இருக்கும் சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் பங்கு தரகருக்குத் தேவைப்படும் அனைத்து விபரங்களையும் அவரிடம் பெற்ற 'கணக்கு தொடங்கும் படிவத்தில்' வாடிக்கையாளர் முழுமையாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

8. கணக்கு தொடங்கும் படிவ ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து அத்தியாவசிய ஷரத்துக்களையும் வாடிக்கையாளர் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகள் மற்றும் வரையறைகள் படி, பங்கு தரகர் கேட்கும் இதர கூடுதல் ஆவணங்கள் கட்டாயமற்றவை.

9. கணக்கு தொடங்கப்பட்ட காலத்திலும் அல்லது அதற்குப் பிறகும் 'கணக்கு தொடங்கும் படிவத்தில்' குறிப்பிட்ட செய்திகளில் ஏதாவது மாற்றம் நிகழும் பட்சத்தில், முடித்துக் கொள்ளும் மனு தாக்கல்/ நொடிப்பு நிலை மனு தாக்கல் அல்லது வாடிக்கையாளரின் தாங்குதிறன் பாதிப்படைவது போல் இருக்கும் எந்த ஒரு தகராறு விபரங்கள் உட்பட்ட செய்திகளை, வாடிக்கையாளர் ஏற்றுக் கொண்டிருக்கும் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு அவற்றை பங்கு தரகருக்கு தாமதிக்காமல் தெரியப்படுத்த வேண்டியது கட்டாயமாகக் கருதப்படும். காலவரை இடைவெளிகளில் பங்கு தரகருக்கு தன் நிதிநிலை குறித்த சமீப விபரங்களை வாடிக்கையாளர் தெரியப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

10. கணக்கு தொடங்கும் படிவத்தில் அல்லது வேறு விதத்தில் பெறப்பட்ட வாடிக்கையாளர் சம்பந்தப்பட்ட தகவல்களை பங்கு தகரரும் துணை தரகரும் இரகசியத்துடன் பாதுகாக்க வேண்டும், சட்டம்/ஒழுங்குமுறை விதிமுறைகளைத் தவிர்த்து வேறு யாருக்கும்/ அதிகாரத்திற்கும் அவற்றைத் தெரியப்படுத்தக் கூடாது. என்றாலும், வாடிக்கையாளர் விருப்பப்பட்டு பங்கு தரகருக்கு ஒப்புதல் அளிக்கும் போது வாடிக்கையாளர் அனுமதிக்கும் தகவல்களை பங்கு தரகரின் வாடிக்கையாளர் என்ற வகையில் அனுமதிக்கப்பட்ட தகவல்களைத் தெரிவிப்பதில் தடையில்லை.

## மார்ஜின்கள்

11. பொருந்தும் ஆரம்ப மார்ஜின்கள், நிறுத்திவைப்பு மார்ஜின்கள், சிறப்பு மார்ஜின்கள் அல்லது வாடிக்கையாளர் மேற்கொள்ளும் வர்த்தகங்களில் சம்பந்தப்பட்ட பிரிவு/பிரிவுகளுக்கு அவசியம் என்று அவ்வப்போது பங்கு தரகர் அல்லது எக்ஸ்சேஞ்ச் அல்லது SEBI குறிப்பிட்டிருக்கும் அப்படிப்பட்ட இதர மார்ஜின்களை வாடிக்கையாளர் கட்டாயம் செலுத்த வேண்டும். பங்கு தரகர் தன் சொந்த விருப்ப அதிகாரத்தின்படி கூடுதல் மார்ஜின்களை விதிக்கும் போது (எக்ஸ்சேஞ்ச், கிளியரிங் ஹவுஸ்/ கிளியரிங் கார்பொரேஷன் அல்லது SEBI

அவற்றை விதித்திருக்காத போதிலும்) குறிப்பிட்ட காலவரைக்குள் வாடிக்கையாளர் கட்டாயம் செலுத்தியாக வேண்டும்.

12. இவ்வாறு வாடிக்கையாளர் செலுத்தும் மார்ஜின்களை, வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய பாக்கி தொகைகளை முழுவதுமாகச் செலுத்திவிட்டதாக எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதை வாடிக்கையாளர் புரிந்து கொண்டிருக்கிறார். இவ்வாறு வாடிக்கையாளர் தொடர்ந்து மார்ஜின்களைச் செலுத்திக் கொண்டிருந்தாலும், வர்த்தகங்கள் செட்டில்மென்ட் தேதியில், ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டுள்ளபடி/தேவைப்படுகின்றபடி கூடுதல் தொகைகளை வாடிக்கையாளர் செலுத்த (அல்லது உரிமையுடன் திருப்பிப் பெற) பொறுப்பேற்றுக் கொள்வார்.

## பரிவர்த்தனைகளும் செட்டில்மென்ட்களும்

13. பங்குகளை/டிரைவேடிவ் ஒப்பந்தங்களை பங்கு தரகர் வாங்க அல்லது விற்க வாடிக்கையாளர் கொடுக்கும் கட்டளைகள் எழுத்து பூர்வமாக அல்லது அத்தகைய வடிவத்தில் அல்லது முறையில் பங்கு தரகரும் வாடிக்கையாளரும் பரஸ்பரம் ஒப்புக்கொண்டபடி இருக்கும். வாடிக்கையாளருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் யூனிக் கிளையன்ட் கோட் -ஐ (வாடிக்கையாளரின் பிரத்தியேக அடையாள எண்) பயன்படுத்தியே பங்கு தரகர் வாடிக்கையாளரின் கோரிக்கைகளைச் செயல்படுத்தி வர்த்தகத்தை முடிக்க வேண்டும்.

14. டிரேடிங் (வர்த்தகம்) / செட்டில்மென்ட் சுழற்சிகள், டெலிவரி/பேமண்ட் அட்டவணைகள், அவ்வப்போது அவற்றில் செய்யப்படும் மாற்றங்கள் ஆகியவற்றை பங்கு தரகர் வாடிக்கையாளருக்குத் தெரிவித்துக் கொண்டிருப்பார். வர்த்தகங்கள் மேற்கொள்ளப்படும் சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்சின் அட்டவணைகள்/ நடைமுறைகளுக்கு இணங்கி செயல்பட வாடிக்கையாளர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

15. வாடிக்கையாளர் நம்பி கொடுத்திருக்கும் பணம் / பங்குகளை பங்கு தரகர் ஒரு தனி கணக்கில் வைத்திருக்க வேண்டும், அந்த கணக்கு தன் சொந்த கணக்கு அல்லது வேறு வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து வேறுபட்டிருக்க வேண்டும்; விதிகள், விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டிருப்பவை, SEBI வழிநடத்தல் குறிப்புகள் மற்றும் / அல்லது விதிகள், எக்ஸ்சேஞ்சுகளின் துணை விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிக்கைகளில் குறிப்பிட்டிருப்பவை தவிர்த்து தன் சொந்த உபயோகத்திற்கு அல்லது வேறு வாடிக்கையாளர் உபயோகத்திற்கு அதைப் பயன்படுத்தக் கூடாது.

16. எக்ஸ்சேஞ்சு/ எக்ஸ்சேஞ்சுகள் தானாகவே முன்வந்து வாடிக்கையாளர் சார்பாகச் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் உள்பட அதுபோன்ற ஒப்பந்தங்களை அறவு செய்யும் போது (நீக்கிவிடும் போது) அவை அதன் காரணமாகவே அறவு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும், பங்கு தரகரும் சம்பந்தப்பட்ட தன் வாடிக்கையாளருடனான ஒப்பந்தம் / ஒப்பந்தங்களை அறவு செய்ய உரிமை பெற்றிருப்பார்.

17. எக்ஸ்சேஞ்சுகளில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்ச் விதிகள், துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கும் அவற்றின் கீழ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள்/ அறிக்கைகளுக்கு உட்பட்டிருக்கும்; வர்த்தகம் மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்சேஞ்சின் விதிகள், துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள், அவற்றின் கீழ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் / அறிக்கைகள்படி நடவடிக்கைகளைச் செயல்படுத்த வர்த்தகத்தில் ஈடுபட்ட அனைத்து பார்டிகளும் எக்ஸ்சேஞ்ச் துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நீதிமன்ற அதிகார வரம்பிற்கு உட்பட்டிருப்பார்கள்.

## தரகுக் கட்டணம்

18. பங்கு தரகர் வாடிக்கையாளருக்கு வழங்கும் பரிவர்த்தனைகளுக்கு வாடிக்கையாளர் கணக்கில் சேர்க்கப்படும் தரகுக் கட்டணங்களையும் அந்தந்த கால கட்டத்தில் வசூலிக்கப்படும் இதர பிற சட்டபூர்வ வரிகளையும் வாடிக்கையாளர் பங்கு தரகருக்குச் செலுத்த வேண்டும். பங்கு தரகர் வசூலிக்கும் தரகுக் கட்டணங்கள் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகள் மற்றும் / அல்லது SEBI விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் குறிப்பிட்டிருக்கும் அதிகபட்ச தரகுக் கட்டணத்திற்கு மிகைப்படாமல் இருக்கும்.

## கலைப்பு மற்றும் நிலைமையை மூடுதல்

19. பங்கு தரகரின் இதர பிற உரிமைகளுக்கு பங்கம் விளையாமல் (பிரச்னையை தீர்ப்பாயத்திற்கு எடுத்துச் செல்லும் உரிமை உட்பட) வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய மார்ஜின்கள் அல்லது வேறு பாக்கி தொகைகள், நிலுவை தொகைகள் போன்றவற்றை வசூலிக்கும் பொருட்டு வாடிக்கையாளரின் நிலைமையை முழுவதுமாகவோ / பகுதியாகவோ கலைத்து விடும் / மூடிவிட்டு இந்த நடவடிக்கைகளால் கிடைக்கும் தொகையைக் கொண்டு வாடிக்கையாளரின் பொறுப்புகள் / கடமைகளைச் சரிசெய்யும் உரிமை பங்கு தரகர் பெற்றிருக்கிறார் என்பதை வாடிக்கையாளர் புரிந்து கொண்டிருக்கிறார். இந்த கலைப்பு / மூடிவிடும் நடவடிக்கைகளால் விளையும் அனைத்து நஷ்டங்கள் மற்றும் நிதிக் கட்டணங்கள் முழுவதும் வாடிக்கையாளர் கணக்கில் சேர்க்கப்படும், அவர் மட்டுமே இதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

20. வாடிக்கையாளர் மரணம் அல்லது நொடிப்பு நிலை காரணமாக அவர்/ அந்த அமைப்பு தொகை பெற முடியாத அல்லது செலுத்த முடியாத நிலைமை அல்லது அவர் கட்டளை பிறப்பித்து வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட பங்கு ஆவணங்களை மாற்றிக் கொடுக்கவியலாத நிலை தோன்றும் போது, வாடிக்கையாளரின் நிலைமையை முடித்து விட்டு அதனால் விளைந்த நஷ்டங்களை வாடிக்கையாளரின் சொத்துகளிலிருந்து வசூலிக்கும் உரிமை பங்கு தரகர் பெற்றிருப்பார். இந்த நடவடிக்கையில் மீந்திருக்கும் தொகைகளுக்கு வாடிக்கையாளர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர்கள், வாரிசுரிமையர், வாரிசுதாரர்கள், உரிமைமாற்றம் பெற்றவர்கள் உரிமை பெற்றிருப்பார்கள். பணம் / பங்கு ஆவணங்களை நியமிக்கப்பட்டவர் பெயரில் பங்கு தரகர் மாற்றிக் கொடுத்துவிடும் நடவடிக்கை, சட்டரீதியான வாரிசைப்

பொறுத்த வரையில் முறையாகச் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும் என்பதை வாடிக்கையாளர் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

21. பணம் செலுத்த / டெலிவரி செய்யத் தவறும் அல்லது அதைச் சார்ந்த வாடிக்கையாளர் செய்கைகளை பங்கு தரகர் எக்ஸ்சேஞ்சின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். இது போன்ற தவறிழைக்கும் வாடிக்கையாளர் ஒரு நிறுவனம் / பார்ட்னர்ஷிப் / தனியுரிமை நிறுவனம் அல்லது வேறு சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாக இருக்கும்பட்சத்தில், அதன் இயக்குனர்(கள்) / புரமோட்டர்(கள்)/ பார்ட்னர்(கள்)/ உரிமையாளர் பெயர்களை பங்கு தரகர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்சேஞ்சுக்கு(களுக்கு) தெரிவிக்க வேண்டும்.

## தகராறு தீர்வு

22. சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்சுகள் மற்றும் SEBIயைத் தொடர்பு கொள்ளும் விபரங்களை பங்கு தரகர் வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துவார்.

23. பங்கு தரகர் மூலமாகச் செய்யப்பட்ட அனைத்து பங்கு ஆவணங்கள் டெலிவரியில் குறைபாடு, டெலிவரி குறைபாடுகளைக் கலைத்தல் போன்ற மறுப்புகளை தீர்த்துக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகளில் பங்கு தரகர் முழுமையாக ஒத்துழைப்பார்.

24. டெபாசிட்டுகள், மார்ஜின் தொகை போன்றவற்றிலிருந்து எழும் கேட்புரிமைகள் மற்றும் / அல்லது தகராறுகளை எக்ஸ்சேஞ்ச் விதிகள், துணை விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் அவற்றின் கீழ் நடப்பிலிருக்கும் அவ்வப்போது செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் / அறிக்கைகள் படி நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

25. பங்கு தரகரும் அவர் வாடிக்கையாளரும் ஒப்பந்த ரீதியாக ஈடுபட்டு மேற்கொண்ட வர்த்தக நடவடிக்கைகளில் எழுந்த தகராறுகளை நடுவர் தீர்ப்புக்கு எடுத்துச் சென்று விரைந்து தீர்த்துக்கொள்ள அனைத்து நடவடிக்கைகளையும் பங்கு தரகர் எடுத்து நடுவர் தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்வார்.

26. வாடிக்கையாளர்/பங்குதரகர் தகராறுகளை விசாரித்து தீர்ப்பு வழங்க அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முடிவுசெய்து வாடிக்கையாளர்/ பங்கு தரகருக்கு வழங்கப்படும் எந்த ஒரு தீர்ப்புக்கும் தீர்ப்பு வழங்கப்பட்ட எழுத்துகளுக்கு வாடிக்கையாளர் / பங்கு தரகர் கட்டுப்பட்டு நடந்துகொள்ள வேண்டும் என்பதை வாடிக்கையாளர்/பங்கு தரகர் புரிந்துகொள்கிறார்.

## உறவை முடித்துக்கொள்ளுதல்

27. எந்த ஒரு காரணத்திற்காகவும், பங்கு தரகரின் இயலாமை, மரணம், பணி துறப்பு அல்லது வெளியேற்றம் அல்லது இயக்குனர் சபை உரிமத்தை அறவு செய்தல் நிகழ்வுகள் உள்ளிட்டவை, பங்கு தரகரின் எக்ஸ்சேஞ்ச் உரிமம் நீக்கமடையும் போது, பங்கு தரகருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயுள்ள உறவும் முடிவடைந்துவிடும்.

28. எந்த ஒரு காரணத்தையும் கூறாமல் பங்கு தரகர், துணை தரகர் மற்றும் வாடிக்கையாளர் அவர்களுக்கு இடையேயுள்ள உறவை முறித்துக்கொள்ளும் உரிமை பெற்றிருப்பார்கள் என்றாலும், ஒருவர் மற்றவருக்கு குறைந்தபட்சம் எழுத்துபூர்வ ஒரு மாத கால அவகாசம் கொடுக்க வேண்டும். இந்த உரிமைக்கு எந்த பங்கமும் விளையாமல், உறவுமுறையை முடித்துக்கொள்வதற்கு முன்னர் இரு தரப்பினரும் ஈடுபட்டிருந்த பரிவர்த்தனைகளில் எழுந்த உரிமைகள், பொறுப்புகள், கடமைகளுக்கு அவர்கள் பொறுப்பேற்றவர்களாகவே இருப்பார்கள், அத்துடன் இரு தரப்பினரின் வாரிசுதாரர்கள், நிறைவேற்றுனர்கள், நிருவாகிகள், சட்டரீதியான பிரதிநிதிகள் மற்றும் வழிவந்தவர்கள், அந்தந்த முறை சார்ந்து, பொறுப்பேற்றவர்களாகவே இருப்பார்கள்/ கருதப்படுவார்கள்.

29. ஒருவேளை எந்த ஒரு காரணத்திற்காகவாவது, துணை தரகருக்கு மரணம்/ நொடிப்பு நிலை ஏற்பட்டால் அல்லது இயக்குநர் சபை அங்கீகாரத்தை அறவுசெய்ததால் அல்லது ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் அங்கீகாரத்தை திரும்பப் பெற்று நீக்கியதால் மற்றும் / அல்லது பங்கு தரகருடன் ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டதால் ஒரு துணை தரகரின் நிலை முடிவுக்கு வருமானால், இந்த தகவல் வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கப்பட்டு, வாடிக்கையாளர் பங்கு தரகரின் நேரடி தொடர்பில் இருப்பதாகக் கருதப்படும்; இதற்கிடையில் வாடிக்கையாளர் தன் உறவுமுறையை முடித்துக்கொள்ள விருப்பம் தெரிவித்து ஒரு மாத கால அவகாசத்திற்குக் குறையாமல் எழுத்துபூர்வமாக பங்கு தரகருக்குத் தெரிவித்திருக்காத பட்சத்தில், பங்கு தரகர், துணை தரகர் மற்றும் வாடிக்கையாளர் ஆகியோரைக் கட்டுப்படுத்தும் 'உரிமைகளும் பொறுப்புகளும்' ஆவணம் (ஆவணங்கள்) பங்கமடையாமல் நடப்பில் இருப்பதாகவே கொள்ளப்படும்.

## கூடுதல் உரிமைகளும் பொறுப்புகளும்

30. பங்கு தரகர் மூலமாக வாடிக்கையாளர் மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சார்ந்த வாடிக்கையாளருக்குரிய டிவிடெண்ட்கள், உரிமைகள் அல்லது போனஸ் பங்குகள் போன்ற உரிமைகளைக் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பங்கு தரகர் எடுப்பதை உறுதிசெய்வதுடன், எந்த வாடிக்கையாளருடன் மற்றும் எந்த வாடிக்கையாளருக்காக அவர் மூலமாக பங்கு வர்த்தகங்களை மேற்கொள்ளப்பட்டதோ அவருக்கு தீங்கு விளையும் எதையும் பங்கு தரகர் செய்ய மாட்டார்.

31. சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்சுகள் மற்றும் SEBIயின் விதிகள், ஒழுங்குமுறை விதிகள், துணை விதிகள், சுற்றறிக்கைகள், அறிக்கைகள் மற்றும் வழிநடத்தல் குறிப்புகளைச் சார்ந்து பங்கு தரகரும் அவர் வாடிக்கையாளரும் நிறைவேற்றப்பட்ட வர்த்தங்களுக்கான தங்கள் கணக்குகளை வழக்கமான கால இடைவெளிகளில் சரிசெய்துகொள்ள வேண்டும்.

32. வாடிக்கையாளர் சார்பாக பங்கு தரகர் மேற்கொள்ளும் ஒவ்வொரு வர்த்தக நடவடிக்கைக்கு எக்ஸ்சேஞ்சுகள் அவ்வப்போது நடைமுறையில் வைத்திருக்கும் வடிவத்தில் ஒப்பந்த ரசீது ஒன்றை பங்கு தரகர் வழங்குவார். இவ்வாறு வழங்கப்படும் ஒப்பந்த ரசீதில் ஆர்டர் எண், வர்த்தக எண், வர்த்தக நேரம், வர்த்தக விலை, வர்த்தக அளவு, டிரைவேடிவ்ஸ் ஒப்பந்த

விபரங்கள், வாடிக்கையாளர் கோட், தரகுக் கட்டணம், விதிக்கப்பட்ட அனைத்து வரிகள் போன்றவை உள்ளிட்ட தகவல்கள் அனைத்தும் அதில் எழுதப்பட்டிருப்பதோடு இதர பொருத்தமான விபரங்களும் முறையாக நிரப்பப்பட்டு எக்ஸ்சேஞ்ச் விதித்திருக்கும் காலவரைக்குள் அது பரிந்துரைத்திருக்கும் விதத்தில் அனுப்பி வைக்க வேண்டும். வர்த்தக நடவடிக்கை மேற்கொண்ட ஒரு வேலை தினம் முடிவடைவதற்குள் முதலீட்டாளர்களுக்கு பங்கு தரகர் இலக்கமுறை கையொப்பமிட்டு அச்சடிக்கப்பட்ட/ எலக்ட்ரானிக் ரசீதை அனுப்பி வைக்க வேண்டும்.

33. வர்த்தகம் நிறைவேற்றப்பட்ட எக்ஸ்சேஞ்ச் அவ்வப்போது வகுத்து நடைமுறையிலிருக்கும் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு வாடிக்கையாளர் வேறு எதையும் குறிப்பிட்டுருக்காத பட்சத்தில் வர்த்தகம் நடந்த எக்ஸ்சேஞ்சிலிருந்து பங்கு தரகருக்கு பே அவுட் கிடைத்த ஒரு வேலை நாளுக்குள் அவர் தன் வாடிக்கையாளருக்கு பணம் செலுத்த வேண்டும் அல்லது பங்கு ஆவணங்களைக் கொடுத்துவிட வேண்டும்.

34. வர்த்தகம் மேற்கொள்ளப்பட்ட எக்ஸ்சேஞ்ச் அவ்வப்போது வகுக்கும் காலவரைக்குள் பணம் மற்றும் பங்கு ஆவண வர்த்தகங்கள், பொருந்துவது போல், சார்ந்த முழு விபரங்கள் அடங்கிய ‘கணக்கு அறிக்கைகளை’ பங்கு தரகர் தன்னுடைய ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அனுப்பி வைப்பார். இவ்வாறு அனுப்பப்படும் அறிக்கை வடிவம் மற்றும் காலவரை சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்சுகள் வகுத்த காலவரையையும் வடிவத்தையும் அனுசரித்து இருக்கும். கணக்கு அறிக்கையில் ஏதேனும் தவறுகள் இருக்கும் பட்சத்தில் அறிக்கை கிடைத்த குறிப்பிட்ட காலவரைக்குள் வாடிக்கையாளர் பங்கு தரகருக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற வர்த்தகம் நிறைவேற்றப்பட்ட சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்சின் விதிமுறையைச் சுட்டிக்காட்டும் அறிவிப்பும் அதில் அச்சிடப்பட்டிருக்கும்.

35. தினசரி மார்ஜின் அறிக்கைகளையும் பங்கு தரகர் அவர் வாடிக்கையாளருக்கு அனுப்பி வைப்பார். இதர பிற விபரங்களுடன், அளிக்கப்பட்ட துணை பிணையங்கள் விபரம், துணை பிணையம் பயன்படுத்தப்பட்ட நிலவரம், பணம், நிரந்தர வைப்பு நிதி ரசீதுகள் (எஃப்டிஆர்-கள்), வங்கி உத்தரவாதம் மற்றும் பங்கு ஆவணங்கள் ஆகிய பிரிவுகளில் பிரிக்கப்பட்ட துணை பிணைய படிநிலை (மீதமிருக்கும் இருப்பு / வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய பாக்கி) விபரங்களும் அதில் காணப்படும்.

36. பங்கு தரகருடன் உறவுமுறை ஒப்பந்தத்தில் ஈடுபட்டு அதன் பொறுப்புகளையும் கடமைகளையும் நிறைவேற்றும் சட்டரீதியான ஆற்றல் இருப்பதையும், அதற்குரிய அதிகாரம் தனக்கு வழங்கப்பட்டிருப்பதையும் வாடிக்கையாளர் கட்டாயம் உறுதி செய்துகொள்ள வேண்டும். அனைத்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான இணக்க நடைமுறைகளை மேற்கொள்ள முடிவதை வாடிக்கையாளர் பங்கு தரகருடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னதாகவே நிச்சயம் செய்துகொண்ட பிறகே வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

## மின்னணு ஒப்பந்த ரசீதுகள் (இசிஎன்)

37. வர்த்தக ஒப்பந்த ரசீதுகளை எலக்ட்ரானிக் வடிவத்தில் பெற வாடிக்கையாளர் ஒப்புதல் அளித்திருக்கும் பட்சத்தில், அதற்குப் பொருந்தும் மின்னஞ்சல் முகவரி ஒன்றை வாடிக்கையாளர் பங்கு தரகருக்குத் தெரியப்படுத்த வேண்டும். மின் அஞ்சல் முகவரியில் ஏதேனும் மாற்றம் நிகழும் போது அந்த மாற்றங்கள் சார்ந்த விபரங்களை காகிதத்தில் முறையாக எழுதி பங்கு தரகருக்கு அனுப்பி வைக்க வேண்டும். வாடிக்கையாளர் தன் வர்த்தகங்களை இணையதளம் மூலமாகச் செய்ய தேர்ந்தெடுத்திருக்கும் பட்சத்தில், மின்னஞ்சல் முகவரி மாற்றம் குறித்த தகவல்களை பாதுகாக்கப்பட்ட அணுகுமுறை வழியாக வாடிக்கையாளர் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் பயனர் ஐடி மற்றும் கடவுச் சொல்லைப் பயன்படுத்தி பங்கு தரகருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

38. மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் வர்த்தக ஒப்பந்த ரசீதுகளில் (இசிஎன்) பங்கு தரகர் இலக்கமுறையில் கையொப்பமிட வேண்டும், மறை குறியீடாக்கப்பட்டிருக்க வேண்டும், இடைபுகுந்து திருத்தப்படாததாகவும் அத்துடன் அவை தகவல் தொழில்நுட்ப சட்டம், 2000 விதிமுறைகளுடன் இணக்கமாக இருப்பதையும் உறுதிசெய்ய வேண்டும். மின்னஞ்சல் மூலமாக ஒரு இணைப்பாக இசிஎன் அனுப்பப்பட்டால், இணைக்கப்பட்ட கோப்பும் இலக்கமுறையில் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும், மறை குறியீடாக்கபப்ட்டிருக்க வேண்டும், இடைபுகுந்து திருத்தப்படாததாகவும் இருக்க வேண்டும்.

39. பங்கு தரகருக்கு மின்அஞ்சல் போய் சேரவில்லை என்ற பவுன்ஸ்ட் மெயில் அறிக்கை கிடைக்காத வரை மின்அஞ்சல் வழியாக அனுப்பப்பட்ட ஒப்பந்த ரசீது வாடிக்கையாளர் அளித்திருக்கும் மின்அஞ்சல் முகவரியில் சேர்க்கப்பட்டுவிட்டதாகவே கருதப்படும்.

40. தகவல் தொழில்நுட்ப சட்டம், 2000 மற்றும் அவ்வப்போது SEBI/ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் வகுத்து நடப்பிலிருக்கும் விதிகள்/ ஒழுங்குமுறை விதிகள்/ சுற்றறிக்கைகள்/ வழிநடத்தல் குறிப்புகளைச் சார்ந்த நடைமுறை வழக்கங்களுக்கு ஏற்ப பங்கு தரகர் இசிஎன், மின்அஞ்சல் கிடைக்கப்பெற்ற தகவல் ஆகியவற்றை இடைபுகுந்து திருத்தவியலாத வடிவ மென் நகல்களாக சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் குறிப்பிட்டிருப்பது போல் பங்கு தரகர் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். SEBI/ ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் ஒழுங்குமுறை விதிகளை அனுசரித்து நடப்பிலிருக்கும் வழக்கத்தை ஒட்டி டெலிவரி செய்யப்பட்ட சான்றுகளை அதாவது மின்அஞ்சலில் ஒப்பந்த ரசீதுகளை அனுப்பும் வேளையில் சிஸ்டம் உற்பத்தி செய்யும் நடவடிக்கை அறிக்கைகளை பங்கு தரகர் குறிப்பிட்ட காலத்திற்கு பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒப்பந்த ரசீதுகளை வாடிக்கையாளருக்கு/ இமெயில் நிராகரித்தவை அல்லது பவுன்ஸ்ட் பேக் ஆகி டெலிவரி செய்யப்படாத விபரங்கள் நடவடிக்கை அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருக்கும். பவுன்ஸ்ட் மெயில்ஸ் தகவல் கிடைக்கப்பெற்ற விபரங்களை முடிந்த வரையில் சேகரிக்க அனைத்து முயற்சிகளையும் SEBI/ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் விதிகள் நடைமுறைபடுத்தப்படும் வழக்கத்தை ஒட்டி குறிப்பிட்ட காலவரைக்குள் பங்கு தரகர் அனைத்து சமயங்களிலும் செய்ய வேண்டும்.

41. மின்அஞ்சலில் எலக்ட்ரானிக் வடிவ ஒப்பந்த ரசீதுகளைப் பெற விரும்பாத வாடிக்கையாளர்களுக்கு அச்சடித்த காகித ஒப்பந்த ரசீதுகளை பங்கு தரகர் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருப்பார். வாடிக்கையாளர்களுக்கு இசிஎன்கள் எங்கெல்லாம் டெலிவரி செய்யப்படவில்லையோ அல்லது வாடிக்கையாளர் மின்அஞ்சல் முகவரி நிராகரித்திருக்கிறதோ (பவுன்ஸிங் ஆஃப் மெயில்ஸ்), அச் சமயங்களில் காகிதத்தில் அச்சடித்த ஒப்பந்த ரசீதுகளை வாடிக்கையாளருக்கு SEBI/ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் விதிகளை அனுசரிக்கும் நடைமுறை வழக்கத்தை ஒட்டிய காலவரைக்குள் பங்கு தரகர் அனுப்பி வைக்க வேண்டும், இவ்வாறு காகிக ஒப்பந்த ரசீதுகள் டெலிவரி செய்யப்பட்ட நிரூபணங்களை பங்கு தரகர் சேமித்து வைத்திருக்க வேண்டும்.

42. வாடிக்கையாளர்களுக்கு மின்அஞ்சலில் இசிஎன்களை அனுப்பி வைப்பதுடன், பங்கு தரகர் பராமரிக்கும் சொந்த இணைய தளத்திலும், அவ்வாறு ஒன்று இருந்தால், அவற்றைப் பிரசுரிக்க வேண்டும். பாதுகாப்பு காவலுடன் பராமரிக்கப்படும் இந்த இணைய தளத்தில் வாடிக்கையாளர்கள் இவற்றை அணுகி ஒப்பந்த ரசீதுகளைப் பதிவிறக்கம் செய்ய, விரும்பினால் அச்சடித்துக்கொள்ளும் வசதியும், இதற்கென்று தனிப்பட்ட பயனர் பெயரும் கடவுச் சொல்லும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

## சட்டமும் ஆட்சி எல்லையும்

43. பங்கு தரகர், துணை தரகர் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இந்த ஆவணத்தில் வழங்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட உரிமைகளுக்கும் மேலாக வர்த்தக நடவடிக்கைகளுக்கு வாடிக்கையாளர் தேர்ந்தெடுக்கும் எக்ஸ்சேஞ்சுகளின் விதிகள், துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அவற்றின் கீழ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள்/ அறிக்கைகள் அல்லது SEBI வகுத்திருக்கும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் வழங்கும் உரிமைகளையும் அவர்கள் பெற்றிருப்பார்கள்.

44. இந்த ஆவணத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் ஷரத்துக்கள் அனைத்தும் எப்பொழுதும் அந்தந்த காலகட்டத்தில் நடைமுறையிலிருக்கும் அரசு அறிவிப்புகள், SEBI வெளியிடும் விதிகள், ஒழுங்குமுறை விதிகள், வழிநடத்தல் குறிப்புகள், சுற்றறிக்கைகள்/ அறிக்கைகள் மற்றும் வர்த்தகத்திற்குத் தேர்ந்தெடுத்த சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்சுகள் வகுத்திருக்கும் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் துணை விதிகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

45. நடுவர் தீர்ப்பாயம் மற்றும் சமரசம் சட்டம், 1996-ன் கீழ் நடுவர்(கள்) அளித்த தீர்ப்புகளுக்கு பங்கு தரகர் மற்றும் வாடிக்கையாளர் கட்டாயம் கட்டுப்பட வேண்டும். ஒருவேளை நடுவர் தீர்ப்பு இரு தரப்பினரில் யாருக்காவது திருப்தி அளிக்கவில்லை என்றால், ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் அமைப்பில் மேல்முறையீடு செய்வதற்கும் வசதி செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது.

46. இந்த ஆவணத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கும் வார்த்தைகளுக்கும் சொற்பதங்களுக்கும், பிரயோகம் செய்யப்பட்டிருக்கும் சூழ்நிலைகளில் மாற்றங்கள் இல்லாத பட்சத்தில், SEBI/ எக்ஸ்சேஞ்சுகள் வகுத்திருக்கும் விதிகள், துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள்,

அவற்றின் கீழ் செய்யப்பட்ட சுற்றறிக்கைகள்/ அறிக்கைகளில் புரிந்துகொள்ளப்படும் அர்த்தங்களையே கொள்ள வேண்டும்.

47. பங்கு தரகர் தானாகச் சேர்த்திருக்கும் ஷரத்துகள் / ஆவணங்கள் அனைத்தும் SEBI/ எக்ஸ்சேஞ்சுகள் வகுத்திருக்கும் விதிகள்/ ஒழுங்குமுறை விதிகள்/அறிக்கைகள்/ சுற்றறிக்கைகளிலிருந்து மீறியதாக இருக்கக் கூடாது. தானாகச் சேர்த்திருக்கும் ஷரத்துகள் / ஆவணத்தில்(ஆவணங்களில்) மாற்றம் செய்வதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அறிக்கை விட வேண்டும். எக்ஸ்சேஞ்சுகள்/ SEBI குறிப்பிட்டிருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகளில் செய்யப்படும் மாற்றங்களை வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு பங்கு தரகர் கொண்டு செல்ல வேண்டும்.

48. சம்பந்தப்பட்டவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளில் செய்யப்படும் மாற்றங்கள் SEBI வகுத்திருக்கும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படும் மாற்றங்களால் அல்லது வர்த்தகங்கள் மேற்கொள்ளப்படும் எக்ஸ்சேஞ்சுகளின் துணை விதிகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் நிகழும் மாற்றங்களால் விளைந்திருக்கிறது என்றால், அப்படிப்பட்ட மாற்றங்கள் இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகளிலும் திருத்தப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாக கருதப்படும்.

**இன்டர்நெட் மற்றும் ஒயர்லெஸ் டெக்னாலஜி அடிப்படையில் வர்த்தகம் செய்ய பங்கு தரகர்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் வசதி (*'உரிமைகளும் பொறுப்புகளும்'* ஆவணத்தில் (ஆவணங்களில்) குறிப்பிடப்பட்டிருக்கும் அனைத்து ஷரத்துகளும் பொருந்தும். கூடுதலாக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஷரத்துகளும் பொருந்தும்.)**

1. இன்டர்நெட் பேஸ்டு டிரேடிங் (ஐபிடி) மற்றும் செக்யூரிடி டிரேடிங் வசதிகளை மொபைல் போன், டேட்டா கார்டு சேர்க்கப்பட்ட லாப்டாப் போன்றவற்றிலிருந்து இன்டர்நெட் புரொடொகோல் (ஐபி) பயன்படுத்தி ஒயர்லெஸ் தொழில்நுட்பம் மூலமாக வர்த்தகம் செய்யும் உரிமை பங்கு தரகருக்கு அளிக்கப் படுகிறது. இது போன்ற இன்டர்நெட் பேஸ்ட் டிரேடிங் / செக்யூரிடி டிரேடிங் மேற்கொள்ள SEBI மற்றும் எக்ஸ்சேஞ்சுகள் அந்தந்த கால கட்டத்தில் வகுக்கும் அனைத்து பொருந்தும் விதிகளுக்கும் பங்கு தரகர் கட்டாயம் இணங்கி நடந்துகொள்ள வேண்டும்.

2. ஒரு வாடிக்கையாளர் முதலீடு செய்ய / பங்கு ஆவணங்களில் வர்த்தகம் செய்ய விரும்பம் கொண்டு அதற்காக இன்டர்நெட் பேஸ்ட் டிரேடிங் அல்லது ஒயர்லெஸ் டெக்னாலஜி மூலமாக செக்யூரிடி டிரேடிங் செய்ய ஆர்வப்படலாம். இதுபோன்ற சமயங்களில், சந்பந்தப்பட்ட ஸ்டாக் எஸ்க்சேஞ்ச் பங்கு தரகரின் ஐபிடி சேவையை பங்கு தரகரின் வாடிக்கையாளரும் பயன்படுத்த அனுமதிக்கும், வாடிக்கையாளரும் இச் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றாலும் இந்த அனுமதி SEBI/ எக்ஸ்சேஞ்சுகளின் ஷரத்துகள், நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டதாகவும், பங்கு தரகரின் ஐபிடி இணைய தள பயன்பாடு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டும், எக்ஸ்சேஞ்சுகள் / SEBI ஆகியவை குறிப்பிட்டிருக்கும் விதிகளைச் சார்ந்தும் இருக்கும்.

3. ஒயர்லெஸ் தொழில்நுட்பம்/ இன்டர்நெட்/ ஸ்மார்ட் ஆர்டர் ரூட்டிங் மூலமாகச் செய்யப்படும் பங்கு வர்த்தகங்களின் சிறப்பம்சங்கள், அபாய இடர்கள், பொறுப்புகள், கடமைகள் மற்றும் பிணைப்பொறுப்புகளை பங்கு தரகர் வாடிக்கையாளருக்கு எடுத்துக் கூற வேண்டும், கூடவே வேறு தொழில்நுட்பங்கள் மூலம் செய்யப்படும் வர்த்தகங்களைக் குறித்தும் வாடிக்கையாளருக்கு பங்கு தரகர் எடுத்துரைக்க வேண்டும்.

4. பங்கு தரகரின் ஐபிடி சிஸ்டம் தானாகவே ஆரம்ப கடவுச்சொல்லை உற்பத்தி செய்யும் என்பதையும், எக்ஸ்சேஞ்சுகள்/SEBI பரிந்துரைத்திருக்கும் விதிகளை அனுசரித்து கடவுச் சொல் பாலிசி வகுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பங்கு தரகர் வாடிக்கையாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

5. பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்ளும் பொறுப்பு வாடிக்கையாளரையே சார்ந்திருக்கும். பங்கு தரகரின் ஐபிடி சிஸ்டத்தில் பயனர் பெயரையும் கடவுச் சொல்லையும் பயன்படுத்தி செய்யப்படும் அனைத்து கட்டளைகளுக்கும், மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும், இவ்வாறு

செய்பவர் வாடிக்கையாளரால் அனுமதிக்கப் பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், வாடிக்கையாளரே பிணைபொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்டர்நெட் டிரேடிங் / ஒயர்லெஸ் டெக்னாலஜி மூலம் செக்யூரிடீஸ் டிரேடிங் செய்வதற்கு ஆர்டர் ரூட்டெட் சிஸ்டம் உறுதியளித்தல் தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டிப்பான காவல் பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியப்படும் என்பதையும் வாடிக்கையாளர் தெரிந்து வைத்திருக்க வேண்டும், கூடவே வாடிக்கையாளர் மற்றும்/ அல்லது அவர் அதிகாரம் பெற்ற பிரதிநிதியின் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை வேறு யாருக்கும், பங்கு தரகர் அலுவலக பணியாளர் உட்பட, தெரிவிக்கக் கூடாது என்பதையும் வாடிக்கையாளர் புரிந்து வைத்திருக்க வேண்டும்.

6. வாடிக்கையாளர் ஒருவேளை தன் கடவுச்சொல்லை மறந்து விட்டார் என்றால், பங்கு தரகரின் ஐபிடி சிஸ்டத்தில் குறைபாடுகள் இருப்பது தெரிய வந்தால், முரண்பாடுகள் / தவறுகளை இருப்பதை கண்டு கொண்டால் / இருப்பதாகச் சந்தேகித்தால் / அதிகாரம் அளிக்கப்படாதவர் வாடிக்கையாளரின் பயனர் பெயரையும் கடவுச் சொல்லையும்/ கணக்கையும் பயன்படுத்தியிருக்கிறார் என்ற சந்தேகம் தோன்றினால் அதன் முழு விபரங்களை, அனுமதிக்கப்படாத பயன்பாட்டை, நடவடிக்கை நிகழ்ந்திருக்கும் தேதி, நடந்திருக்கும் விதம், நடவடிக்கை விபரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு நடவடிக்கை நடந்திருப்பதைத் தொடர்ந்து வாடிக்கையாளர் பங்கு தரகருடன் தொடர்பு கொண்டு அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

7. இன்டர்நெட்/ஒயர்லெஸ்தொழில்நுட்பம் மூலம் செய்யப்படும் பங்கு வர்த்தகங்கள், அனுப்பப்படும் கட்டளைகள் வசதிகளிலுள்ள அபாய இடர்களை வாடிக்கையாளர் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும், வாடிக்கையாளர் பயனர் பெயரில்/கடவுச் சொல் மூலமாகச் செய்யப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் வாடிக்கையாளர் பிணைபொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக வாடிக்கையாளர் புரிந்து கொண்டிருக்கிறார்.

8. வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கு இணங்கி கட்டளை/வர்த்தக வணிக உறுதிப்பாடு தகவலை மின்அஞ்சல் மூலம் பங்கு தரகர் அனுப்பி வைப்பார். வெப் போர்ட்டலிலும் கட்டளை/ வர்த்தக வணிக உறுதிப்பாடு தகவல் கிடைப்பதை வாடிக்கையாளர் தெரிந்து வைத்திருப்பார். ஒயர்லெஸ் தொழில்நுட்பம் வழியாக வாடிக்கையாளர் வர்த்தகம் செய்யும் போது, கட்டளை/வர்த்தக வணிக உறுதிப்பாடு தகவலை வாடிக்கையாளர் கருவிக்கு பங்கு தரகர் அனுப்பி வைப்பார்.

9. இன்டர்நெட் மூலம் செய்யப்படும் வர்த்தங்கள் சிக்கலான ஹார்ட்வேர், சாஃப்ட்வேர், சிஸ்டம்ஸ், கம்யூனிகேஷன் லைன்ஸ், பெரிஃபெரல்ஸ் போன்ற பல நிச்சயமில்லாத நிகழ்வுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதையும், இடைத்தடங்கல்கள், இடப்பெயர்ச்சிகள் போன்றவைகளுக்கு உட்பட்டிருக்கும் என்பதையும் வாடிக்கையாளர் புரிந்து வைத்திருக்கிறார். பங்கு தரகரின் ஐபிடி சேவை எல்லா நேரத்திலும் எப்பொழுதும் தடங்கலில்லாமல் கிடைத்துக் கொண்டிருக்கும் என்பதான தர உறுதியை எதையும் பங்கு தரகர் அல்லது எக்ஸ்சேஞ்ச் அளிக்கவில்லை.

10. பங்கு தரகரின் ஐபிடி சிஸ்டம் இடை நிறுத்தம் செய்யப்படுதல், தடங்கல், தொடர்பு கிடைக்காமலிருத்தல் அல்லது சரியாக வேலை செய்யாமல் இருத்தல் அல்லது பங்கு தரகர் / எக்ஸ்சேஞ்சின் கட்டுப்பாட்டிற்கு மீறிய எந்த காரணத்திற்காகவாவது வாடிக்கையாளர் / பங்கு தரகர் / எக்ஸ்சேஞ்ச் பக்கத்திலிருந்து தொடர்பு கிடைக்காததால் / சிஸ்டம் செயலிழப்பால் எக்ஸ்சேஞ்சின் சேவை அல்லது சிஸ்டம் அல்லது வாடிக்கையாளரின் கட்டளைகள் நிறைவேற்றப்படாமல் போதல் காரணத்திற்காக வாடிக்கையாளர் எக்ஸ்சேஞ் அல்லது பங்கு தரகருக்கு எதிராக எந்த கேட்புரிமையையும் செய்ய முடியாது.

# பிற்சேர்க்கை - 5

# மூலதனச் சந்தை மற்றும் டிரைவேடிவ்ஸ் பிரிவுகளுக்கான இடர் வெளிப்படுத்துதல் ஆவணம்

சமபங்குகள் / டிரைவேடிவ்ஸ் பிரிவுகளில் எக்ஸ்சேஞ்சில் செய்யப்படும் வர்த்தகங்களிலுள்ள இடர்களை இந்த ஆவணம் விளக்குகிறது. சமபங்குகள் / டிரைவேடிவ்ஸ் பிரிவுகளில் எக்ஸ்சேஞ்சுகளில் வர்த்தகங்களை மேற்கொளும் முன்னர் அனைத்து எதிர்கால வாடிக்கையாளர்களும் இதை அவசியம் படித்து தெரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த ஆவணத்தில் விளக்கப்பட்டிருக்கும் இடர்கள் முழுமையானவை என்றோ அல்லது போதுமான விளக்கங்கள் என்றோ அல்லது துல்லியமானவை என்றோ ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் / SEBI தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ, வெளிப்படையாகவோ அல்லது உள்ளர்த்தம் கொண்டோ தெரிவிக்கவில்லை. மாறாக, வர்த்தகப் பிரிவுகளில் பங்கேற்பதால் அனுகூலங்களை கூறுவதாகவோ அல்லது அதற்கு ஆதரவு அளிப்பதாகவோ எடுத்துக்கொள்ளக் கூடாது. வர்த்தகத்திலிருக்கும் அனைத்து இடர்களையும் வேறு கனிசமான வர்த்தக செயல்விளைவுகளையும் இந்த சுருக்கமான ஆவணம் முழுமையாக வெளிப்படுத்த வில்லை.

இடர்கள் நிறைந்திருக்கும் காரணத்தால், நீங்கள் மேற்கொள்ளவிருக்கும் உறவுமுறை மற்றும் நீங்கள் எதிர்கொள்ள விருக்கும் அபாய அளவுகளைப் புரிந்துகொண்ட பிறகே நீங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளில் நடத்தப்படும் மூலதனப் பங்குகள், டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்கள் அல்லது இதர பிற ஆவணங்கள் சார்ந்த வர்த்தகங்களில் பல அளவுகளைக் கொண்ட இடர்கள் நிறைந்திருக்கின்றன என்பதையும், வரையறையுள்ள வளங்கள் / முதலீடுகள் செய்வதில் மற்றும்/அல்லது பங்கு வர்த்தகங்களில் ஈடுபடுவதில் மற்றும் அதிக அல்லது பெரிய அபாயங்களை எதிர்கொள்ள தைரியமில்லாதவர்களுக்கு இது ஏற்ற இடம் இல்லை என்ற பொதுவான எச்சரிக்கையை நீங்கள் கட்டாயம் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகையால் உங்கள் நிதி நிலைமையைக் கருதி இது போன்ற வர்த்தக நடவடிக்கைகள் உங்களுக்கு ஏற்றது தானா என்பதை கவனமாகச் சிந்தித்த பிறகே பங்கு வர்த்தகங்களில் ஈடுபட வேண்டும். ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு வர்த்தகங்களில் ஈடுபட்டு ஒருவேளை நீங்கள் எதிர்பாராத சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேர்ந்தால் அல்லது பெரிய நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தால் நீங்கள் மட்டுமே அதற்குப் பொறுப்பேற்க வேண்டியிருக்குமே அல்லாது ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள்/ அதன் கிளியரிங் கார்பொரேஷன் மற்றும்/ அல்லது SEBI ஒரு போதும், எவ்வகையிலும் அதற்குப் பொறுப்பாக முடியாது என்பதும், இடர்களை போதுமான விளக்கத்துடன் எனக்குத் தெரியப்படுத்தவில்லை என்றோ அல்லது நான் புரிந்துகொள்ளும் விதத்தில் எனக்கு முழுமையாக விளக்கப்படவில்லை என்றோ சம்பந்தப்பட்ட பங்கு தரகரை நீங்கள் குற்றம் கூற முடியாது என்பதையும் நீங்கள் புரிந்து செயல்பட வேண்டும். இதன் காரணமாக எந்த ஒப்பந்தத்தையும் மாற்ற

அல்லது செயல்படாமல் தடுக்க முடியாது என்பதால் வாடிக்கையாளராகப் போகும் நீங்கள் மட்டுமே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஒரு டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தை ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளில் வாங்கும் போது மற்றும் / அல்லது விற்கும் போது இலாபத்திற்கு அல்லது நஷ்டமடையாமல் தப்பிப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொண்டு அந்த நிலையை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும்.

ஒரு பங்கு தரகர் மூலமாக ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் வர்த்தகங்களில் நீங்கள் ஈடுபடுவதற்கு முன்னர் பங்கு தரகர் விதிக்கும் சில இசைவு நடவடிக்கைகளுக்கு உடன்பட வேண்டும், அதுபோன்ற நடவடிக்கைகளில், உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் படிவத்தை நிரப்ப வேண்டும், உரிமைகளும் பொறுப்புகளும் ஆவணத்தைப் படித்து புரிந்துகொள்ள வேண்டும், செய்யத் தக்கன மற்றும் செய்யத் தகாதன போன்றவற்றையும் நீங்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும், சம்பந்தப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின், அவற்றின் கிளியரிங் கார்பொரேஷன் வகுத்திருக்கும் விதிகள், துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்குக் கட்டுப்பட சம்மதிக்க வேண்டும், கூடவே அவ்வப்போது SEBI வெளியிட்டிருக்கும் வழிநடத்தல் விதிகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கும் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளும் கிளியரிங் கார்பொரேஷன்களும் வெளியிட்டு அவ்வப்போது நடப்பிலிருக்கும் சுற்றறிக்கைகளுக்கும் நீங்கள் இணங்கி நடக்க வேண்டும்.

ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுடன் தொடர்புடைய ஒரு பங்கு தரகர் மற்றும்/அல்லது மூன்றாம் நபருடன் இந்த ஆவணத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு தகவல் அடிப்படையிலாவது நீங்கள் வர்த்தக உறவுமுறையில் ஈடுபட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் ஆதரிக்கின்றன என்றோ அவ்வாறு சொல்கின்றன என்றோ நீங்கள் கருத முடியாது. இந்த ஆவணத்திலிருக்கும் விபரங்களை ஒரு வர்த்தக ஆலோசனையாக ஒருபோதும் நீங்கள் புரிந்துகொள்ளக் கூடாது. ஒரு வர்த்தகத்திலிருக்கும் இடர்களை முழுமையாகப் புரிந்து அவற்றைச் சீர்தூக்கிப் பார்க்காமல் அவற்றில் நீங்கள் ஈடுபடக் கூடாது, உங்களுக்குத் தெளிவாகவில்லை என்றால், அவற்றைக் குறித்து தொழில்முறையாளர்களின் ஆலோசனைகளைக் கட்டாயம் பெற்று செயல்படுவது நல்லது.

நீங்கள் வர்த்தகத்தில் ஈடுபடுவதா அல்லது உங்கள் சார்பில் மற்றவர் ஒருவரை ஈடுபடச் செய்வதா என்று கருதும் போது, கீழே கொடுக்கப்பட்டிருப்பவை உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்:

## 1.அடிப்படை இடர்கள்:

### 1.1 மிக அதிக விலைமாற்ற இடர்:

ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளில் நடக்கும் வர்த்தகங்களில் பங்கு ஆவணங்கள்/டிரைவேடிவ்ஸ் ஒப்பந்த விலைகள் நிலையில்லாமல் மிக அதிக ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டுக் கொண்டிருக்கும். பங்கு/டிரைவேடிவ்ஸ் ஒப்பந்த விலை எந்த அளவிற்கு மாற்றமடைகிறதோ அதே அளவில் விலைகளில் ஏற்ற இறக்கமும் பொதுவாக மாறுபடும். தீவிர வியாபாரம் நடக்கும் பங்குகள் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களில் ஏற்படும் விலை மாற்றங்களுடன் ஒப்பிடும் போது வழக்கமாக, மிகக் குறைந்த அளவில் வியாபாரம் நடக்கும் பங்குகள் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களில் விலை மாற்றங்கள் அதிகமாக இருக்கும். இது போன்ற விலை மாற்ற ஏற்ற இறக்கத்தால் நீங்கள்

செய்திருக்கும் ஆர்டர்கள் பகுதி அளவில் நிறைவேற்றப்படலாம் அல்லது நிறைவேறாமலும் இருந்துவிடலாம், அல்லது நீங்கள் ஆர்டர் செய்து நிறைவேற்றப்பட்ட விலை அதன்பிறகு கடைசியாக நடந்த வியாபார விலையிலிருந்து கனிசமாக மாறுபட்டிருக்கலாம், அதாவது உங்கள் நஷ்டம் பெயரளவாகவோ உண்மையானதாகவோ இருக்கக் கூடும்.

## 1.2 குறைந்த லிக்விடிடி இடர்:

சந்தையில் பங்கேற்றிருக்கும் வாடிக்கையாளர்கள் குறைந்த விலை வித்தியாசத்துடன் போட்டி விலையில் விரைவாக பங்குகளை / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை வாங்கி மற்றும் /அல்லது விற்க முடிவதை லிக்விடிடி (பணமாகும் ஆற்றல்) என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது, சந்தையில் நிறைய ஆர்டர்கள் கிடைக்கும் போது லிக்விடிடி அதிகரித்திருக்கும். லிக்விடிடி முக்கியம் வாய்ந்தது ஏனென்றால், லிக்விடிடி அதிகமிருக்கும் போது குறைந்த விலை வித்தியாசத்தில் முதலீட்டாளர்கள் பங்குகளை/ டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை வாங்கவும் விற்கவும் விரும்புவார்கள் அதனால் பங்குகளை / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை குறைந்த விலை வித்தியாசத்தில் விற்றும் வாங்கியும் அதற்குண்டான தொகையையும் எளிதாகப் பெற முடியும் / கொடுக்க முடியும். தீவிரமாக வாங்கி விற்கப்படும் பங்குகள் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும் போது குறைந்த சில பங்குகள் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களில் குறைந்த லிக்விடிடி இருக்கும் அபாயமும் உண்டு. இதன் காரணமாக உங்கள் ஆர்டர்களில் ஒரு பகுதி மட்டுமே நிறைவேற்றப்படலாம், அல்லது மிகப் பெரிய விலை வித்தியாசத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கலாம் அல்லது நிறைவேற்றப்படாமலும் இருக்கலாம்.

1.2.1 அன்றாட வணிக உக்தியின் ஒரு பகுதியாக பங்கு ஆவணங்கள் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை வாங்கும் அல்லது விற்கும் திட்டத்தில் பெரிய நஷ்டங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமிருக்கும், ஏனென்றால், நாள் முடிவில் திறந்த நிலை அல்லது பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களைக் கொடுக்க வேண்டிய அல்லது பெற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகாமல் இருக்கும் நிலையை எட்ட விரும்பும் சூழ்நிலையில் பங்குகள் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களை எதிர்பார்த்திருக்கும் விலைகளை விட குறைந்த / அதிக விலையில் வாங்கி / விற்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம்.

## 1.3 விரிந்த விலை மாறளவு இடர்

மிகச் சிறந்த வாங்கு விலைக்கும் மிகச் சிறந்த விற்கும் விலைக்கும் இடைப்பட்ட வித்தியாசத்தை விலை மாறளவு என்கிறோம். அதாவது பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் ஒன்றை வாங்கி உடனே விற்கும் போது அல்லது விற்ற உடனே வாங்கும் போது நிகழும் விலை வித்தியாசத்தைக் குறிப்பதாகப் புரிந்து கொள்ளலாம். மிகக் குறைந்த லிக்விடிடி உள்ள பங்குகள் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களில் குறைந்த லிக்விடிடி மற்றும் அதிக லிக்விடிடி நிலை இயல்பு விலை மாறளவைவிட அதிகம் விரிந்திருக்கும் வாய்ப்புகள் அதிகம் இருக்கும். இதனால் விலை மேம்படும் நிகழ்வு பாதிப்படையும்.

## 1.4 இடர்களைக் குறைக்கும் ஆர்டர்கள்:

நஷ்டத்தை ஓரளவு தொகை வரை குறைக்கும் எண்ணத்துடன் போடப்படும் ஆர்டர்கள் (உ.ம். “ஸ்டாப் லாஸ்” ஆர்டர்கள், அல்லது “லிமிட்” ஆர்டர்கள்) பல நேரங்களில் பிரயோஜனமில்லாமல் போக நேரலாம், ஏனென்றால் சந்தை நிலவரத்தில் ஏற்படும் அதிக வேக மாற்றங்களில் இது போன்ற ஆர்டர்களை நிறைவேற்றுவது கடினமாகலாம்.

1.4.1 எதிர் தரப்பில் ஆர்டர்கள் தயாராகக் கிடைக்கும் போது “மார்கெட்” ஆர்டர்களாகப் போடப்பட்ட ஆர்டர்கள் விலைகளைப் பற்றி அலட்டிக் கொல்லாமல் தாமதமில்லாமல் நிறைவேற்றப்படும் வாய்ப்புகள் அதிகம், வாடிக்கையாளர் தாமதமின்றி ‘மார்கெட்’ ஆர்டரை பெற்றுக்கொள்வார். இவ்வாறு நிறைவேற்றப்படும் ஆர்டர்கள் சந்தையில் வாங்க விற்கத் தயாராக இருக்கும் விலை அடிப்படையில் அந்தந்த விலையில் தயாராகக் கிடைக்கும் கொள்முதல் அளவுக்குத் தகுந்தவாறு சரியான விலை நேர முன்னுரிமையின்படி. இவ்வாறு நிறைவேற்றப்படும் ஆர்டர்களின் விலைகள் கடைசியாக நிறைவேற்றப்பட்ட விலைகளிலிருந்து அல்லது அந்த பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தின் மிகச் சிறந்த விலைகளிலிருந்து மிக அதிகம் வேறுபட்டிருக்கக் கூடும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

1.4.2 “லிமிட்” ஆர்டர் ’லிமிட்’ விலையில் அல்லது அதற்கும் அதிக விலையில் மட்டுமே நிறைவேற்றப்படும். இது போன்ற ஆர்டர்களில் வாடிக்கையாளருக்கு விலை குறித்த பாதுகாப்பு கிடைக்கும் என்றாலும், அவர் ஆர்டர் நிறைவேற்றப்படாமல் போகும் அபாயங்களையும் எதிர்கொள்ள வேண்டும்.

1.4.3 ஒரு பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தின் தற்போதைய விலையை விட “விலகியே” ஸ்டாப் லாஸ் ஆர்டர்கள் பொதுவாக சந்தையில் செய்யப்படுகின்றன என்றாலும், சந்தையில் பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் விலை அந்த ஸ்டாப் லாஸ் ஆர்டர் விலையைத் தொடும் போது அல்லது இந்த விலையைக் கடந்து போகும் போது இந்த ஸ்டாப் லாஸ் ஆர்டர் செயல்படும். நடப்பு விலையைக் காட்டிலும் குறைவாக ஸ்டாப் செல் ஆர்டர்களும், நடப்பு விலையைக் காட்டிலும் அதிகமாக ஸ்டாப் பை ஆர்டர்களும் பொதுவாகச் செய்யப்படும். பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் விலை சந்தையில் அந்த முன்-முடிவு செய்யப்பட்ட விலையைத் தொடும் போது அல்லது அந்த விலையைக் கடந்து போகும் சமயங்களில் ஸ்டாப் லாஸ் ஆர்டர்கள் மார்கெட் / லிமிட் ஆர்டர்களாக மாற்றமடைந்து அந்த விலையில் அல்லது அதற்கும் மேலான சகாய விலையில் நிறைவேற்றப்படும். இவ்வாறு முன்னதாகவே முடிவு செய்யப்படும் விலையை பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் விலை தொடும் அல்லது கடந்து போகும் என்ற உத்தரவாதம் ஏதும் இல்லாத நிலையில் இது போன்ற ஸ்டாப் லாஸ் ஆர்டர்கள், வழக்கமான லிமிட் ஆர்டர்களைப் போலவே, நிறைவேற்றப்படாமல் போகும் வாய்ப்புகள் எழும்.

## 1.5 செய்தி அறிவிப்புகளின் இடர்

பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் சம்பந்தப்பட்ட செய்திகள் வர்த்தகம் நடந்து கொண்டிருக்கும் போது வெளியிடப்படும் சமயங்களில் அதுவும் குறைந்த லிக்விடிடியுடன் அதிக விலை மாறளவு

வீச்சுடன் சேரும் போது, அந்த பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தின் விலை ஏகமாக ஏற்றமடைந்தோ அல்லது இறக்கமடைந்தோ எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

### 1.6 வதந்திகளின் இடர்

சில நேரங்களில் சந்தைகளில் நிறுவனங்கள் / செலாவணி குறித்த வதந்திகள் பேச்சு வழக்கில், செய்தித்தாள்கள், இணையதளங்கள் அல்லது செய்தி முகமைகள் போன்றவை மூலம் பரவலாம். வதந்திகளை அடையாளம் கண்டு முதலீட்டாளர்கள் அவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும்.

### 1.7 சிஸ்டம் இடர்:

சந்தை ஆரம்பம் ஆகும் போதும், சந்தை முடிவடையும் நேரத்திலும் மிக அதிக எண்ணிக்கையில் வர்த்தகங்கள் நடைபெறுவது அடிக்கடி நிகழும் சம்பவம். ஒரு நாளில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இதுபோன்ற அதிக எண்ணிக்கை வர்த்தகங்கள் நடைபெறக் கூடும். இவற்றால் ஆர்டர்கள் நிறைவேற்றப்படுவதும் அல்லது உறுதியாக்கம் கிடைப்பதும் தாமதமாகலாம்.

1.7.1 விலை மாறளவு சமயங்களில், வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் தொடர்ந்து விலையையும் கொள்முதல் அளவையும் மாற்றி ஆர்டர்களைப் புதுப்பித்துக் கொண்டிருப்பதால் அல்லது புது ஆர்டர்களைச் செய்து கொண்டிருப்பதால், ஆர்டர்கள் நிறைவேற்றப்படுவதும் அல்லது உறுதியாக்கம் கிடைப்பதும் தாமதமாகலாம்.

1.7.2 ஒரு சில சந்தை நிலவரத்தில், ஒரு நியாயமான விலையில் தன்னிடமிருப்பவை அனைத்தையும் காலி செய்ய வகை கிடைக்காமல் போகலாம் அல்லது வாங்குவதற்கும் விற்பதற்கும் ஆர்டர்கள் ஏதும் இல்லாத நிலை உருவாகலாம், அல்லது வழக்கமில்லா வர்த்தக செயல்பாடுகள் காரணமாக அல்லது ஏதாவது ஒரு விளைவு சார்ந்து பங்கு / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தத்தில் வர்த்தகம் நிறுத்தப்படலாம் அல்லது பங்கு / டிரைவேடிவ் ஒப்பந்தம் சர்க்யூட் ஃபில்டர்ஸ் நிலையை எட்டிவிடும் போது அல்லது வேறு எந்த காரணத்திற்காகவும் வர்த்தகம் நிறுத்தப்படலாம்.

### 1.8 சிஸ்டம்/நெட்வொர்க்ஸ் நெரிசல்:

ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளில் எலக்ட்ரானிக் முறையில் வர்த்தங்கள் செய்யப்படுகின்றன, சாட்டிலைட் / லீஸ்ட் லைன் தகவல் தொடர்பு அடிப்படையில் கம்ப்யூட்டர் சிஸ்டம்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் மூலம் அனுப்பிப் பெறப்படும் ஆர்டர்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆகையால், தகவல் தொடர்பு செயலிழப்பு அல்லது சிஸ்டம் பிரச்னைகள் அல்லது மெதுவாகச் செயல்படுதல் அல்லது தாமதித்த சிஸ்டம் எதிர்ச்செயல்கள் அல்லது வர்த்தகம் நிறுத்தப்படுதல் அல்லது இதர பிற பிரச்னைகள் / சிக்கல்கள் காரணமாக டிரேடிங் சிஸ்டம் / நெட்வொர்க்குடன் தொடர்பு கொள்ள முடியாமல் போதல் போன்றவை யாருடைய கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவையாக இல்லை என்பதால் ஆர்டர்கள் பரிசீலிக்கப்படுவது தாமதப்படலாம் அல்லது வாங்க அல்லது விற்க செய்யப்பட்டிருக்கும் ஆர்டர்கள் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ நிறைவேற்றப்படாமல்

போய்விடலாம். இதுபோன்ற பிரச்னைகள் தற்காலிகமானவை என்று எச்சரிக்கை செய்யப்பட்ட போதிலும், உங்கள் நிலுவை நிலைமை அல்லது எதிர்பாராத ஆர்டர்கள் போன்றவை நீங்கள் நிறைவேற்றியே ஆக வேண்டிய பிணைபொறுப்புகளுக்கும் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஆர்டர்களுக்கும் பொறுப்பேற்றவர்களாக ஆகி எதிர்பாராத நிலைமையில் தள்ளப்படும் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

**2. டிரைவேடிவ்ஸ் பிரிவுகளைப் பொறுத்த வரையில், கீழே கொடுக்கப்பட்டிருக்கும் கூடுதல் விஷயங்களை தயவுசெய்து தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்:-**

**2.1 “லிவரேஜ்”மற்றும் “கியரிங்” விளைவு:**

டிரைவேடிவ்ஸ் சந்தையில், டிரைவேடிவ்ஸ் ஒப்பந்த தொகையுடன் ஒப்பிடும் போது மார்ஜின் அளவுகள் மிகவும் குறைவு என்பதால் நடவடிக்கைகள் ”லிவரேஜ்டு” அல்லது ”கியர்டு” செய்யப்பட்டவையாகக் கருதப்படும். சிறிய மார்ஜின் அளவுகளிலேயே செய்யப்படும் டிரைவேடிவ்ஸ் வர்த்தகங்கள் மார்ஜின் தொகைகளுடன் ஒப்பிடும் போது மிகப் பெரிய இலாபம் அல்லது நஷ்டத்திற்கான வாய்ப்புகளுடன் செய்யப்படுகின்றன என்றாலும் டிரைவேடிவ்ஸ் வர்த்தகங்களில் பெரிய அபாயங்கள் பொதிந்திருப்பதை உணர்ந்தே அவை செய்யப்படுகின்றன.

ஆகையால் டிரைவேடிவ்ஸ் சந்தை வர்த்தகங்களில் ஈடுபடுவதற்கு முன்னால் உங்கள் சூழ்நிலை, நிதி நிலை வளங்கள் போன்றவற்றையும் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வாசகங்களையும் முழுமையாகப் புரிந்துகொண்டு எச்சரிக்கையுடன் வர்த்தகம் செய்வது நல்லது. விலைகள் உங்களுக்கு எதிராகப் போய்க் கொண்டிருக்கும் போது மார்ஜின் தொகையில் ஒரு பகுதியை வெகு குறுகிய காலத்தில் நீங்கள் இழக்க நேரிடலாம். அதோடு, ஆரம்ப மார்ஜின் தொகையை விட அதிகரித்த நஷ்டமாகவும் அது மாறக்கூடும்.

A. ஃபியூச்சர்ஸ் டிரேடிங்கில் உங்கள் அனைத்து நிலைகளையும் தினசரி அடிப்படையில் சரிகட்ட வேண்டியிருக்கும். ஒரு நாள் ஆரம்பத்தில் உங்கள் ஓப்பன் பொசிஷன்களை சந்தைக்கு முடிவடைந்த குறியீட்டெண் / டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தம் அடிப்படையில் மதிப்பிடப்படும். விலை உங்களுக்கு எதிராகப் போயிருந்தால் அந்த விலை சரிவின் பொருட்டு கணக்கிடப்படும் நஷ்டத் தொகையை (பெயரளவு) டெபாசிட் செய்ய வேண்டியிருக்கும். பொதுவாக அடுத்த நாள் சந்தை ஆரம்பிக்கும் முன்னர், ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் இந்த தொகையை நீங்கள் டெபாசிட் செய்ய வேண்டியிருக்கும்.

B. இந்த கூடுதல் தொகையை குறிப்பிட்ட நேரத்திற்குள் நீங்கள் கட்டத் தவறும் போது அல்லது உங்கள் கணக்கில் நிலுவைத் தொகை காட்டப்படும் போது, பங்கு தரகர் உங்கள் பொசிஷனிலிருந்து ஒரு பகுதியையோ அல்லது முழு பொசிஷனையோ விற்றுவிடுவார் அல்லது வேறு பிணையத்தால் அதை நிரப்பிக் கொள்வார். இது போன்ற முடித்து சரிகட்டும் நடவடிக்கைகளால் விளையும் நஷ்டங்களுக்கு நீங்கள் மட்டுமே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

C. ஒரு சில சந்தை நிலவரத்தில், சில நடவடிக்கைகளைச் செய்யவோ அல்லது நிறைவேற்றவோ முடியாத நிலையை முதலீட்டாளர் சந்திக்க வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு, லிக்விடிடி, அதாவது வாங்குவதற்கும் விற்பதற்கும் போதுமான ஆர்டர்கள் சந்தையில் கிடைக்காதது அல்லது விலை வரையரை அல்லது சர்க்யூட் பிரேக்கர்ஸ் போன்றவற்றால் வர்த்தகம் இடைநிறுத்தம் செய்யப்படுவது.

D. சந்தை நிலைத்தன்மையை பராமரிக்க, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்: மார்ஜின் வீதத்தை மாற்றிக் கொள்ளலாம், ரொக்க மார்ஜின் வீதத்தை அல்லது மற்றதை அதிகரித்துக் கொள்ளலாம். இது போன்ற புதிய நடவடிக்கைகள் நடப்பிலிருக்கும் ஓப்பன் பொசிஷன்களிலும் செய்து கொள்ளலாம். இதற்கு நீங்கள் கூடுதல் மார்ஜின்களைக் கட்ட வேண்டியிருக்கும் அல்லது உங்கள் பொசிஷன்களைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

E. நீங்கள் வர்த்தகம் செய்ய விரும்பும் டிரைவேடிவ்ஸ் ஒப்பந்தங்களின் முழு விபரங்களையும் - ஒப்பந்த விபரங்கள் மற்றும் அவற்றைச் சார்ந்த பிணைபொறுப்புகள் போன்றவற்றை உங்கள் தரகரிடம் கேட்டுக்கொள்ளலாம்.

## 2.2 செலாவணி சம்பந்தப்பட்ட இடர்கள்:

1. அன்னிய செலாவணியில் செய்யப்பட்ட ஒப்பந்த வர்த்தகங்களில் விளையும் இலாபம் அல்லது நஷ்டம், உங்கள் பிராந்தியத்தில் அல்லது வேறு பிராந்தியத்தில் செய்யப்பட்ட போதிலும், அன்னிய செலாவணி வீத மாற்றங்களால் பாதிப்படையும், அதுவும் ஒப்பந்த செலாவணியிலிருந்து வேறு நாட்டு செலாவணிக்கு மாற்றவேண்டிய அவசியம் ஏற்படும் போது.

2. ஒரு சில சந்தை நிலவரத்தில் உங்கள் பொசிஷனை முழுமையாக நீங்கள் இறக்கி வைக்க முடியாமல் போகும் நிலை ஏற்படலாம். உதாரணத்திற்கு, செலாவணி கட்டுப்பாடு விலக்கம் செய்யப்பட்ட நிலையில் அல்லது வரையறை செய்யப்பட்ட வீதங்கள் விரிக்கப்படும் போது இது நிழகக் கூடும்.

3. செலாவணி விலைகள் ஏகமாக விலை மாறளவுக்கு உட்பட்டிருக்கும். இது போன்ற செலாவணி விலை மாற்றத்திற்குக் காரணமானவைகளில் : மாற்றமடையும் தேவை-வழங்கல் பொருளாதார உறவுமுறை; வர்த்தகம், வருவாய் சார்ந்தவை, பணம் சார்ந்தவை, அரசின் செலாவணி மாற்ற வீதக் கட்டுப்பாடுகளும் பாலிசீக்களும்; அயல் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிகழ்வுகள் மற்றும் திட்டங்கள்; உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வட்டி வீதங்களில் மாற்றங்கள் மற்றும் பணப் பெருக்கம்; செலாவணி மதிப்பு குறைத்தல் மற்றும் சந்தையில் நிலவும் சாதக பாதக மனப்போக்கு. எந்த ஒரு ஆலோசகராலும் இது போன்ற நிகழ்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது, ஒரு ஆலோசகரின் ஆலோசனையால் வாடிக்கையாளர் மேற்கொள்ளும் வர்த்தகங்கள் இலாபகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு அல்லது இது போன்ற நிகழ்வுகளால் நஷ்டம் அடைய வழியில்லை என்பது போன்ற உத்தரவாதம் எதையும் யாராலும் அளிக்க முடியாது.

## 2.3 ஆப்ஷன் ஹோல்டர்களின் இடர்கள்:

1. ஒரு குறுகிய காலத்திற்குள் ஒரு ஆப்ஷனில் முதலீடு செய்த மொத்த பணத்தையும் இழக்கும் அபாயத்திற்கு ஆப்ஷன் ஹோல்டர் ஒருவர் உள்ளாகிறார். ஆப்ஷன் கெடு தேதி முடிவடைந்ததும் அந்த சொத்து வீணாகி பிரயோஜனமில்லாமல் ஆகிவிடும் நிலையை ஆப்ஷனிலிருக்கும் இந்த இடர் சுட்டிக் காட்டுகிறது. ஆப்ஷன் ஹோல்டர் ஒருவர் தன் ஆப்ஷனை இரண்டாம் நிலை சந்தையில் விற்காமல் இருந்தாலோ அல்லது கெடு தேதி முடிவடைவதற்குள் தன் ஆப்ஷனை நிறைவேற்ற முடிவெடுக்காமல் காலம் தாழ்த்தினாலோ, அவர் தன் மொத்த முதலீட்டையும் ஆப்ஷனில் இழக்கும் அபாயத்திற்கு உள்ளாகிறார். ஆப்ஷன் முடிவு தேதிக்குள் எதிர்பார்த்த திசையில் விலை மாற்றம் நிகழாத போது, அதுவும் தன் கொள்முதல் விலைக்கு நஷ்டம் விளையாத அளவிலாவது மாற்றமடையாத போது, முதலீட்டாளரின் ஒரு கனிசமான ஆப்ஷன் முதலீடு இதனால் நஷ்டமடையும் அபாயத்திற்கு உள்ளாகும்.

2. எக்ஸ்சேஞ்சுகள் சில சமயம் செயல்படுவதற்குக் கட்டுப்பாடுகளை விதிக்கும் முழு அதிகாரத்தைப் பெற்றிருப்பார்கள் அதனால் ஒரு சில சமயங்களில் ஆப்ஷன்களை நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலவரங்களை முதலீட்டாளர்கள் சந்திக்க வேண்டிய நிர்பந்தங்களுக்கு உள்ளாவார்கள்.

## 2.4 ஆப்ஷன் எழுதுபவர்களின் இடர்கள்:

1. ஆப்ஷனில் அடங்கியிருப்பனவற்றின் விலைகள் எதிர்பார்த்த திசையில் முன்னேறாமல் இருந்தால் ஆப்ஷன் எழுதியவர் கணிசமான தொகையை இழக்கும் அபாயத்தில் இருப்பார்.

2. அதே பொருட்கள் அடங்கியிருக்கும் வேறு ஆப்ஷன்களை வாங்கி ஓரளவு ஸ்பிரெட் பொசிஷனை வளர்த்துக் கொள்ளும் போது அல்லது வேறு வகை ஹெட்ஜிங் பொசிஷன்களை ஆப்ஷன்ஸ் சந்தைகளில் அல்லது பிற சந்தைகளில் வாங்கி ஆப்ஷன் எழுதுபவர் தன் இடர்களைக் குறைத்துக்கொள்ளலாம். என்றாலும், ஆப்ஷன் எழுதுபவர் ஸ்பிரெட் பொசிஷனில் அல்லது ஹெட்ஜிங் பொசிஷனில் ஏற்பாடுகளைச் செய்து கொண்ட போதிலும், அபாய அளவுகள் இப்பொழுதும் கனிசமாகவே இருக்கும். 'லாங்' அல்லது 'ஷார்ட்' பொசிஷன்களை விட ஸ்பிரெட் பொசிஷன் குறைந்த அபாயமுள்ளது என்று சொல்லிவிட முடியாது.

3. பற்பல ஆப்ஷன்களை கூட்டாக எழுதும் மற்றும் வாங்கும் நடவடிக்கைகள், அல்லது வாங்கும் அல்லது வாங்கும் அல்லது ஷார்ட் விற்பனை செய்யும் ஆப்ஷனில் அடங்கிய பொருள்கள் கூட்டுகள் போன்றவையும் முதலீட்டாளர்களை கூடுதல் இடர்களுக்கு உட்படுத்தும். ஆப்ஷன் ஸ்பிரெட்ஸ் போன்ற கூட்டு நடவடிக்கைகள் ஆப்ஷன் வாங்குதல், அல்லது ஒரு ஆப்ஷனை எழுதுதல் போன்றவற்றுடன் ஒப்பிடும் போது சிக்கலானவை. மற்ற முதலீடுகளைப் போலவே, சிக்கல்களை சரிவர புரிந்துகொள்ளாத நிலையும் ஆபாய காரணிகளில் ஒன்றாகக் கருத்தப்படும் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகையால் கூட்டு சேர்க்கும் திட்டங்களை ஆலோசிக்காதீர்கள் என்று சொல்லப்படவில்லை என்றாலும், அனைத்து முதலீட்டுத் திட்டங்களில் இருப்பது போலவே, விஷயம் தெரிந்த ஒருவரை பற்பல சந்தை நிலவரத்தில் கூட்டு சேர்க்கும் திட்டங்களிலுள்ள

இலாபம் மற்றும் நஷ்ட அபாயங்களில் நல்ல அனுபவ முதிர்ச்சி பெற்றிருக்கும் ஒருவருடன் கலந்தாலோசித்து இவற்றில் ஈடுபடுவது சிறந்தது என்ற கருத்தே இங்கே வலியுறுத்தப் படுகிறது.

## 3. ஒயர்லெஸ் தொழில்நுட்பம் / ஸ்மார்ட் ஆர்டர் ரூட்டிங் அல்லது வேறு தொழில்நுட்பம் மூலம் வர்த்தகத்தில் ஈடுபடுதல்

ஒயர்லெஸ் தொழில்நுட்பம் / ஸ்மார்ட் ஆர்டர் ரூட்டிங் அல்லது வேறு தொழில்நுட்பத்தின் மூலம் செய்யப்படும் பங்கு ஆவண வர்த்தகங்களைச் சார்ந்த கூடுதல் வசதிகளாகக் கிடைக்கும் வர்த்தகத்துடன் தொடர்புடைய அம்சங்கள், இடர்கள், பொறுப்புகள், கடமைகள் மற்றும் பிணை பொறுப்புகள் ஆகியவற்றை பங்கு தரகர் வாடிக்கையாளர் கவனத்திற்கு எடுத்துச்செல்ல வேண்டும்.

## 4. பொதுவானவை

**4.1** மேலே சொல்லப்பட்ட வாடிக்கையாளர் பதத்தில் எக்ஸ்சேஞ்சுகள் செய்து கொடுத்திருக்கும் தொழில்நுட்ப அமைப்பைப் பயன்படுத்தி பங்கு ஆவணங்கள் / டிரைவேடிவ் ஒப்பந்தங்களை வாங்க மற்றும்/அல்லது விற்கும் நோக்கத்துடன் இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு பங்கு தரகரிடம் விவகாரம் வைத்துக்கொள்ளும் கட்சிக்காரர், வாடிக்கையாளர், வாங்குபவர் அல்லது முதலீட்டாளர் என்பதும் அடங்கும்.

**4.2** 'பங்கு தரகர்' என்ற பதம் எக்ஸ்சேஞ்சில் அவ்வாறு அனுமதிக்கப்பட்டு SEBIயிடமிருந்து பதிவு சான்றும் பெற்றிருக்கும் ஒரு பங்கு தரகர், தரகர் அல்லது பங்கு தரகரைக் குறிக்கும் பதமாகவும் அர்த்தம் செய்துகொள்ளப்படும்.

## பிற்சேர்க்கை - 6

## வழிகாட்டுதல் குறிப்பு - எக்ஸ்சேஞ்சில்(எக்ஸ்சேஞ்சுகளில்) முதல்லீட்டாளர்கள் வர்த்தகம் செய்வதற்கு, செய்யத்தக்கவை மற்றும் செய்யத் தகாதவை

### வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு முன்னர்

1. SEBIயிடம் பதிவு செய்துகொண்டிருக்கும் தரகர்கள் மூலமாக மட்டுமே நீங்கள் வர்த்தகங்களை மேற்கொள்வவதை உறுதிசெய்யுங்கள். ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் www.exchange.com மற்றும் SEBIயின் www.sebi.gov.in இணையதளங்களில் கிடைக்கும் பட்டியலில் அவர்கள் SEBI பதிவு சான்றிதழ் எண்ணை சோதித்துக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது.
2. உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் படிவத்தை (கேஒய்சி) முழுவதும் சரியாக நிரப்பிக் கொடுங்கள், படிவத்திலிருக்கும் பொருந்தாத பிரிவுகளை அடித்து விடுங்கள்.
3. உரிமைகளும் பொறுப்புகளும், இடர்களை விளக்கும் ஆவணம், பங்கு தரகரின் பாலிசி மற்றும் நடைமுறை ஆவணம் போன்ற அத்தியாவசிய ஆவணங்களை முழுவதும் படித்து புரிந்து கொண்டிருப்பதை உறுதி செய்யுங்கள்.
4. உங்களுக்கும் பங்கு தரகருக்கும் இடைப்பட்ட சுய சம்மதம் அளிக்கும் ஷரத்துக்கள் அடங்கிய படிவத்தை, அவ்வாறு ஏதும் இருக்கும் பட்சத்தில், முழுவதும் படித்து புரிந்துகொண்ட பிறகே அதில் கையொப்பமிடுங்கள். உங்களுக்கும் பங்கு தரகருக்கும் இடைப்பட்ட நீங்கள் சம்மதம் அளித்திருக்கும் ஷரத்துக்களை உங்கள் சம்மதம் இல்லாமல் மாற்ற முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.
5. வர்த்தகத்திற்காக உங்களிடம் வசூலிக்கப்படும் தரகுக் கட்டணம், கமிஷன்கள், கட்டணங்கள் மற்றும் இதர பிற செலவினங்கள் குறித்த விபரங்களையும் அவற்றைச் சார்ந்த SEBI/ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஷரத்துகள் / வழிநடத்தல் குறிப்புகள் அனைத்தையும் நீங்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.
6. நீங்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கும் அனைத்து படிவங்களின் நகல்களை பங்கு தரகரிடமிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
7. பவர் ஆஃப் அட்டார்ணி (பிஓஏ) ஒன்றை பங்கு தரகர் சார்பில் நீங்கள் செய்து கொடுக்க விரும்பினால், அதன் அடிப்படையில் பங்கு தரகர் உங்கள் வங்கி கணக்கு மற்றும் டிமேட் கணக்கைச் செயல்படுத்தும் அதிகாரத்தை வழங்குவதற்கு முன்னர், SEBI/ எக்ஸ்சேஞ்சுகள் இதன் பொருட்டு வெளியிட்டிருக்கும் வழிநடத்தல் குறிப்புகளைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### பரிவர்த்தனைகளும் செட்டில்மென்டுகளும்

8. நீங்கள் குறிப்பிட்டு அதிகாரம் அளித்து எழுதிக் கொடுத்திருக்கும் விதத்தில் பங்கு தரகர் மின்னணு ஒப்பந்த ரசீதுகளை (இசிஎன்) வழங்குவார். இதற்காக உங்கள் மின்அஞ்சல் முகவரி ஒன்றை உங்கள் பங்கு தரகருக்கு அளிக்க வேண்டும். கம்ப்யூட்டர்களில் உங்கள் அனுபவம் போதுமானதாக இல்லாவிட்டால் இசிஎன் வசதியை நீங்கள் தேர்ந்தெடுக்கக் கூடாது.
9. உங்கள் இணைய வர்த்தக கடவுச்சொல்லை (பாஸ்வெர்ட்) யாருடனும் பகிர்ந்து கொள்ளக் கூடாது.
10. உங்கள் பங்கு தரகரிடம் ரொக்கமாக தொகையைச் செலுத்தக் கூடாது.
11. பங்கு தரகர் பெயரில் கிராஸ் செய்த காசோலைகள் மூலமாக மட்டுமே பணம் செலுத்துங்கள். துணை தரகர் பெயரில் காசோலைகளை வழங்காதீர்கள். நீங்கள் பங்கு தரகரிடம் செலுத்தும் பணம் / பங்கு ஆவணங்களுக்கான ஆவண நிரூபணங்களை பெற்றுக் கொள்வதில் குறியாக இருக்க வேண்டும். இது போன்ற ஆவண நிரூபணத்தில் தேதி, நிறுவனத்தின் பெயர், பங்குகள்

எண்ணிக்கை, எந்த வங்கி/டிமேட் கணக்கில் அந்த பணம் அல்லது பங்கு ஆவணங்கள் செலுத்தப்படுகின்றன, எடுக்கப்பட்டன என்ற வங்கி / டிமேட் கணக்கு விபரங்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

12. வர்த்தகம் செய்யப்பட்ட நிரூபண விபரங்கள் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளங்களிலும் பார்க்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் ஒப்பந்த ரசீதில் கொடுக்கப்பட்டிருக்கும் வர்த்தக விபரங்களை அவற்றில் சரிபார்த்துக் கொள்ளமுடியும். ஒருவேளை உங்களுக்குக் கிடைத்த ஒப்பந்த ரசீதிலிருக்கும் வர்த்தக விபரங்களும் இணையதளத்தில் கிடைக்கும் விபரங்களும் முரண்பட்டிருக்கும் பட்சத்தில், தாமதிக்காமல் சம்பந்தப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் குறைதீர்ப்பு அமைப்புடன் தொடர்பு கொண்டு உங்கள் குற்றச்சாட்டைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

13. உங்கள் சார்பாக ஒரு நடப்பு கணக்கைப் பராமரித்து அதில் தொகை பேஅவுட் அல்லது பங்கு ஆவணங்கள் பேஅவுட் (பொருந்துவது போல்) சேர்க்க வேண்டும் என்று பங்கு தரகருக்கு அதிகாரம் அளித்திருக்கும் போது, எக்ஸ்சேஞ்சிலிருந்து பேஅவுட் கிடைத்த ஒரு வேலை நாளில் அவ்வாறு செய்யப்படாமல் இருக்கும் வாய்ப்பு இருக்கிறது. இது போன்ற நடப்பு கணக்கை பராமரிப்பதை பங்கு தரகர் கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டு செய்து முடிப்பார்:

    a. இது போன்ற அதிகாரங்களை நீங்கள் மட்டுமே வழங்க வேண்டும், தேதியிட்டு கையொப்பம் போட வேண்டும், எந்த சமயத்திலும் இந்த அதிகாரத்தை அறவு செய்து விடும் உரிமை உங்களுக்கு இருக்கும் என்ற ஷரத்தும் அதில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
    b. நீங்கள் தேர்ந்தெடுத்த காலண்டர் காலாண்டில் ஒரு முறை அல்லது மாதந்தோறும் என்ற கால அளவை அனுசரித்து தொகையையும் பங்கு ஆவணங்களையும் பங்கு தரகர் அதில் சேர்ப்பார். கணக்கைச் செட்டில் செய்யும் சமயத்தில், பங்கு தரகர் பேரேட்டில் வாடிக்கையாளர் பேரேட்டின் பிரதி பட்டியல் ஒன்றை ‘கணக்கு அறிக்கையாக’ உங்களுக்கு வழங்குவார். இதில் அனைத்து வரவுகள்/டெலிவரி விபரங்கள் பதிவாகியிருக்கும். இந்த அறிக்கையில் பிடித்து வைத்திருக்கும் தொகைகள், பங்கு ஆவணங்கள் மற்றும் பிணைய விபரங்கள் ஏதேனும் இருந்தால் அதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கும்.
    c. செட்டில்மென்ட் செய்யப்படும் தேதியில், நிலுவையிலிருக்கும் பிணைபொறுப்புக்காகத் தேவைப்படும் பங்கு ஆவணங்கள்/தொகைகளை பங்கு தரகர் தன்னிடம் வைத்துக் கொள்வார், கூடவே எக்ஸ்சேஞ்சுகள் விதித்திருக்கும் வகையில் அடுத்த 5 வர்த்தக நாட்களுக்கு தேவைப்படும் டிரைவேடிவ்ஸ் மார்ஜின் பொறுப்புகளுக்கு தேவை என்று கருதப்படும் தொகையையும் பங்கு தரகர் தன்னிடம் வைத்துக்கொள்வார். ரொக்க சந்தை பரிவர்த்தனையைப் பொறுத்த வரையில், செட்டில்மென்ட் தேதியில் மற்றும் அடுத்த நாள் வர்த்தகத்திற்கான வாடிக்கையாளர் சார்பாக பே-இன் பொறுப்புக்குத் தேவைப்படும் முழு தொகையையும் பங்கு ஆவனங்களையும் தன்னிடமே தக்க வைத்துக் கொள்வார். இவ்வாறு வைத்துக்கொள்ளப்படும் தொகை/பங்கு ஆவனங்கள்/மார்ஜின் அளவு செட்டில்மென்ட் நடக்கும் தேதியில் ரொக்க சந்தையில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் மதிப்பின் அளவைச் சார்ந்திருக்கும்.
    d. கணக்கு அறிக்கை அல்லது செட்டில்மென்ட் செய்யப்பட்டதில் ஏதேனும் தகராறு இருக்கும் பட்சத்தில், அந்த முரண்பாட்டை எழுத்து மூலமாக தொகைகள்/பங்கு ஆவணங்கள் கிடைத்த அல்லது அறிக்கை கிடைத்த 7 (ஏழு) வேலை நாட்களுக்குள் (பொருந்துவது போல்) பங்கு தரகருக்குத் தெரிவிக்க வேண்டும். இதில் பிரச்னை எழுந்தால், தாமதிக்காமல் சம்பந்தப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் குறை தீர்ப்பு அமைப்பிடம் எழுத்து மூலமாக முறையீடு செய்ய வேண்டும்.

14. நீங்கள் இது போன்ற நடப்பு கணக்கு ஏற்பாடு எதையும் பங்கு தரகருடன் செய்துகொள்ளவில்லை என்றால் எக்ஸ்சேஞ்சிலிருந்து பேஅவுட் ஆன அடுத்த தினத்தில் உங்களுக்கு பேஅவுட் தொகை / பங்கு ஆவனங்கள் கிடைக்கவில்லை என்றால், இதைக் குறித்து உடனே உங்கள் பங்கு தரகருக்குத் தெரிவியுங்கள். இதில் ஏதேனும் பிரச்னை எழுந்தால், தாமதிக்காமல் எழுத்து மூலம் சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்ச் குறைதீர்ப்பு அமைப்பிடம் முறையீடு செய்யுங்கள்.
15. உங்கள் மொபைல் நம்பர் மற்றும் மின்அஞ்சல் முகவரியை பங்கு தரகரிடம் பதிவு செய்துகொள்ளுங்கள். இதனால் ஸ்டாக் எஸ்சேஞ்சுகளிடமிருந்து அந்த வர்த்தக நாள் இறுதியில் வர்த்தகம் நிறைவேற்றப்பட்டதை உறுதி செய்யும் தகவல்கள் / வர்த்தக விபரங்கள் போன்றவை எஸ்எம்எஸ் மூலமாக அல்லது மின்அஞ்சல் வழியாக உங்களுக்குத் தெரியப்படுத்தப் படும்.

## டிரேடிங் உறுப்பினர் உரிமை நிறுத்தப்படும் போது

16. ஒருவேளை பங்கு தரகர் தன் உறுப்பினர் உரிமையை திருப்பிக் கொடுத்துவிட்டால், உறுப்பினத்துவத்திலிருந்து நீக்கப்பட்டால் அல்லது தவறிழைத்திருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டால், ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகள் பொது அறிவிப்பு செய்து சம்பந்தப்பட்ட எக்ஸ்சேஞ்சின் "டிரேடிங் சிஸ்டத்தில் நிறைவேற்றப்பட்ட பரிவர்த்தனைகள்" சார்ந்த கேட்புரிமைகள் விபரங்களை மட்டுமே முதலீட்டாளர்களிடமிருந்து கேட்டுக்கொள்ளும். சம்பந்தப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளிடம் குறிப்பிட்டிருக்கும் கெடுதேதிக்குள் கேட்புரிமை சார்ந்த நிரூபண ஆவணங்களுடன் உங்கள் கேட்புரிமைகளைத் தயவுசெய்து தாக்கல் செய்யுங்கள்.
17. பங்கு தரகரிடம் நீங்கள் கொடுத்திருக்கும் பணம் மற்றும்/அல்லது பங்கு ஆவணங்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு விபரங்கள் குறித்து நீங்கள் தெரிந்து வைத்திருப்பது நல்லது, குறிப்பாக பங்கு தரகர் தன் பொறுப்புகளில் தவறும் போது அல்லது பங்கு தரகர் நொடிப்பு நிலையில் தள்ளப்படும் போது அல்லது திவால் ஆகும் போது பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்ட வர்த்தகத்தின் மதிப்பு அளவில் சம்பந்தப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் துணை விதிகள் மற்றும் ஒழுங்கு முறை விதிகள் மற்றும் அந்தந்த கால கட்டத்தில் நடைமுறையிலிருக்கும் முதலீட்டாளர்கள் பாதுகாப்பு நிதி பாதுகாப்பு அளிக்கும் என்பதை தெரிந்து வைத்திருங்கள்.

## தகராறுகள் / குற்றச்சாட்டுகள்

18. சம்பந்தப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளங்களில் நடுவர் தீர்ப்பு செயல்முறைகள், பங்கு தரகர்களுக்கு எதிரான முதலீட்டாளர்கள் குற்றச்சாட்டுகளுக்கான தண்டணை நடவடிக்கைகள் சார்ந்த விபரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.
19. ஒருவேளை உங்கள் பிரச்னைகள்/சிக்கல்கள்/குற்றச்சாட்டுகளை சம்பந்தப்பட்ட பங்கு தரகர்/ துனை தரகர் தீர்த்து வைக்க முடியாத சூழ்நிலைகளில், சம்பந்தப்பட்ட ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளிடம் அவற்றை நீங்கள் எடுத்துச்செல்ல முடியும். உங்கள் பிரச்னைகளுக்குக் கிடைக்கும் தீர்வுகள் திருப்தி அளிக்காத நிலையில் அவற்றை நீங்கள் SEBIயிடம் மேல் முறையீடு செய்யலாம்.
20. குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய வசதி அளிக்கும் விதமாக பங்கு தரகர் / துணை தரகர் அனைவரும் குறைதீர்ப்பு பிரிவு / இணக்க நடவடிக்கை அலுவலர் முகவரியாக மின்அஞ்சல் முகவரி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று SEBI கட்டாய வழிநடத்தல் குறிப்பை வெளியிட்டிருக்கிறது.